
வாழ்ந்தவர்கள்
இப்போது வாழ்ந்து
கொண்டு இருப்பவர்களுக்காக...

# திருமதி நடராசா - மகாலட்சுமி
# அவர்களின் நினைவாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் மேற்கு
அமரர் திருமதி நடராசா - மகாலட்சுமி
அவர்களின் நினைவாக....

இணுவிலில்
05.10.1932

இறைவனிடம்
05.12.2003





## திதிவெண்பா

ஆண்டு சுபானு அணைகார்த் திகைத்திங்கள்
பூண்பூர்வ பட்சம் வருந்தியாம் - மாண்பார்
திரயோ தசியில் மகாலட் சுமிசேர்ந்தார்
முருகனடிப் பேற்றை முனைந்து !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மேற்கு
# அமரர் திருமதி நடராசா - மகாலட்சுமி

**வாழ்க்கைக் குறிப்புகள் -**

நிலவளமும் நீர்வளமும் நிறைந்து மரகதத்தீவென்றும் வருணிக்கப்படும் இலங்கை மணித்திருநாட்டில் கலைவளமும் கல்விவளமும் தொழில்வளமும் பெருகிவரும் பேரூர் இணுவில் இதன் மேற்க்குப்பகுதியில் விவசாயத்தில் பெயர் பெற்றிருந்த ஒரு சைவ வேளாண் குடியில் தந்தை கந்தர், தாய் மாணிக்கத்துக்கும் நாலாவது பிள்ளையாக 05.10.1932. திகதி பிறந்தவர் அமரர் மகாலட்சுமி. இவரது மூத்த உடன் பிறப்புகள் அமரர் குலசேகரம்பிள்ளை, திருமதி த.நாகம்மா ஆகியோர். இவரது இளைய சகோதரர் திரு.சுப்ரமணியம் ஆவார்.

அமரர் மகாலட்சுமி அவர்கள் தமது இளமைக் கல்வியை இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலையில் பெற்றார். பணிவும் பண்பும் மிக்க பிள்ளையாக வளர்ந்த அம்மையார் இணுவில் செகராசசேகரப்பிள்ளையாரையும் இணுவை முருகப்பெருமானையும் வழிபட்டுவந்தார்

மணப்பருவம் எய்தியவேளை பெரியோர்கள் பேசி நிச்சயித்த இணுவில் மேற்கு திரு .கந்தையா நடராசாவை திருமணம் செய்து கொண்டார். கணவன்வீடு வந்து இல்லறம் இனிது நடாத்திய அமரர் மகாலட்சுமி அவர்கள் தமது மைத்துணிமாரான திருமதி ம.முத்துப்பிள்ளை, திருமதி இ.ஞானம்மா ஆகியோரையும் மைத்துணர்களான திரு. இராசதுரை திரு. இராசையா, திரு. தம்பித்துரை, திரு. சதாசிவம் ஆகியோரையும் மாமன் அமரர் சதாசிவம் கந்தையா ஆகியோரையும் மதித்துப் போற்றியும் இல்லற தர்மம் காத்தும் வாழ்ந்தார்

இவரது கள்ளமற்ற இதயத்தின் பேறாக சண்முகவடிவேல் (உரிமையாளர் சரவணன் களஞ்சியம்) ஞானவடிவு (ஜேர்மனி) பிருந்தாபூஷணம் (ஜேர்மனி) கௌசல்யாதேவி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி) சாலினி (சுவிஸ்) ஆகிய பிள்ளைபாக்கியங்களை பெற்று பெருமையுற வாழ்ந்தார். இவர்களுக்காக கையில் பூவேந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்திப்பிள்ளையாரிடமும், நொச்சிநல்லை கந்தனிடமும் சென்று வழிபடுவார்.

சில வருடங்களின் முன் ஏற்பட்ட விபத்தினால் படுத்த படுக்கையாகிவிட்ட அமரர் மகாலட்சுமி அவர்கள் சுபானுவருடம் கார்திகை மாதம் பூர்வபட்சத்துத்திரயோதசித் திதியில் இறைவனடி சேர்ந்தார்.

அவரது ஆன்மாவும் அவரைப்பிரிந்து துயருறும் குடும்பத்தாரின் மனங்களும் சாந்தி அடையப் பிரார்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி**



**தேவாரம்**
**திருச்சிற்றம்பலம்**

நத்தார் படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீர்ச்சரத்தானே

**திருவாசகம்**

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங் கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கன்னயா உடலோடு சேரமான் ஆரூரன்
வினையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்
றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்தவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறுங்கரியுரி போர்வையு மெழில்நீறும்
இலங்குநூலும் புலியதளாடையு மழுமானும்
அசைந்த தோடும் சிரமணிமாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேறு முனிவோனே.
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வாழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

## திருச்சிற்றம்பலம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகள்

யாழ்ப்பாண மக்களுக்கு ஆத்மீக குருவாக இருந்து எம் மக்களை இறையருள் காண வழிசெய்தவர். தான் பெற்ற இன்பம் எம்மக்களுக்கும் கிடைக்க தாம் வாழ்ந்து காட்டியவர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாண இராச்சியத்தின் அரசன்

சங்கிலிய மன்னன். மேற்கத்தியவரின் ஆட்சிக்கு யாழ்ப்பாணம் செல்லும் முன்பு யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னன். இவனுடைய இராசதானியை இன்னும் யாழ்பாணம், நல்லூரில் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர். பொன். இராமநாதன்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இராமநாதன் கல்லூரி போன்ற கல்விச்சாலைகளை நிறுவி யாழ் மக்களின் கல்விக்காக சேவை செய்தார். சிறந்த சிவபக்தனாகிய இவர் கருங்கல்லால் சிவனுக்கு கொழும்பிலும், இணுவில் மருதனார்மடத்திலும் ஆலயங்களை அமைத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. துரைராஜா

இவர் யாழ்ப்பாணத்தின் வடமராச்சியில் பிறந்து கல்வியில் பொறியியலாராக தன்னை சமூகத்துக்கு அறிமுகம் செய்தவர். யாழ் மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைக்காக தமிழ்த் தேசியத்தலைவரால் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

இவர் ஏழை, நோய்வாய்ப்பட்டவர், துன்பத்தில் வாழ்பவர்கள் எல்லோருக்குமாக தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்தவர். பிறருக்காக வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். இவர் வழி வாழ்வோமா.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசங்கரர்

இந்தியாவில் இந்து சமயங்கள் பிரிந்து தனித்தனியே வளர்ந்து வந்த காலத்தில் எல்லாவற்றையும் ஒன்றினைத்தவர் இந்து சமய வழி மக்கள் வாழ வேண்டும் என்று உழைத்தவர். இன்று நாம் சமயத்ததை பின்பற்றுவதைத் தவிர்த்து சமய வழி ஒழுகுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியார்

**இந்திய மக்கள் அன்னியரின் ஆட்சியால் தமது சுதந்திரங்களை வாழ்வியலை தொலைத்து நின்ற வேளையில் தனது தமிழ் கவிதைகள் மூலம் மக்களை சிந்திக்கத் தூண்டியவர். அன்று மக்களின் சுதந்திரத்திற்கு பயன்பட்ட தமிழ் பின் எல்லோருக்கும் தமிழ் அமுதாகியது...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையை வழிபட்டார். மனிதன் இந்த நிலையற்ற உலகில் எதை அடைய வேண்டுமோ அதனை அடைந்தார். அதனை எல்லோரும் அடைய வேண்டி மக்களோடு வாழ்ந்தார். தங்களையும் தங்கள் கேவலமான நிலையையும் அறியாத பாமரமக்களுக்கு பரம்பொருளை காண வழிகாட்டியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர்

இராமகிருஸ்ணரின் சீடன். கடவுளை காணவேண்டும் என்று தனது குருவிடம் கேட்டபோது இராமகிருஸ்ணர் காட்டிய வழியில் சென்று கடவுளைக்கண்டார். இந்தியா, உலகமெங்கும் ஆன்மீக எழுச்சியை ஊட்டுவதற்காக பல வெளிநாடுகளுக்கு சென்று தான் அடைந்த இன்பத்தை அனைவரும் அடைய வழிசெய்தவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்

இற்றைக்கு 2034 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர். அன்று முழு வாழ்க்கையினையும் இரண்டு இரண்டு வரிகளில் 1330 பாடல்களில் பாடியவர். அவருடைய அறிவு இன்று உலக மக்களுக்கு ஒரு வழிகாட்டி நூலாக இருக்கின்றது.

கற்ற கல்வியின் வழி நிற்றலே இவ்வுலகில் செய்யும் மிகப்பெரிய தவமாகும்.

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எங்களின் அன்புத்தெய்வம் திருமதி. நா.மகாலட்சுமி அவர்களின் ஈமச்சடங்கு, அந்தியேட்டி ஆகியவற்றிக்கு நேரில் வருகைதந்தவர்களுக்கும், ஆறுதல் வார்த்தை கூறிய அன்பு உள்ளங்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி ஆறுதல் தந்தோருக்கும் மற்றும் பிற வழிகளில் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைதெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி


அன்புக்கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

கந்தசுவாமி கோவிலடி
இணுவில் மேற்கு,
இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org